செ.வெ.எண்:27/ஜனவரி நாள்:19.01.2016

# செய்திக்குறிப்பு

தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்புத் துறையால் தனியார் துறை வேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு படித்த வேலைவாய்ப்பற்ற பதிவுதாரர்களை தனியார் துறையில் பணியமர்த்தம் செய்து, அவர்களின் வாழ்வில் மாற்றம் ஏற்படவும், ஒவ்வொரு மாதமும் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் தனியார் வேலைவாய்ப்பு சந்தை ஒன்று நடத்தப்பட்டுவருகிறது. அதன்படி இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் தனியார் வேலைவாய்ப்பு சந்தை நடத்தப்பட்டு தனியார் துறையில் கடந்த ஆண்டுகளில் பலர் பணியமர்த்தம் செய்யப்பட்டள்ளனர்.

அதே போன்று மேற்கண்ட தனியார் வேலைவாய்ப்பு சந்தை இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மூலம் இம்மாதம் 22.01.2016 அன்று நடைபெறுவதாக இருந்த இந்த தனியார் வேலைவாய்ப்பு சந்தை, வருகின்ற **28.01.2016**- அன்று காலை 11.00-மணிக்கு நடத்தப்படுவதால், இதில் கலந்து கொண்டு படித்த வேலைவாய்ப்பற்ற மாணவ / மாணவிகள் தங்களின் சுய சரிதையுடன் கூடிய விண்ணப்பம், மார்பளவு புகைப்படம் ஐந்து (5), அனைத்து அசல் கல்விச்சான்றுகள் மற்றும் ஒளி நகல் (ஜெராக்ஸ்)-களுடன் நேரில் ஆஜராகி பயனடையுமாறு தெரிவிக்கப்படுகிறது.

தனியார் துறை வேலையளிப்போர்கள் தங்களுக்கு தேவைப்படும் விபரத்திணை இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு **22.01.2016**-க்குள் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வேலைவாய்ப்பு சந்தையின் மூலம் பணியமர்த்தம் செய்யப்படுபவர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு எக்காரணத்தை கொண்டும் ரத்து செய்யப்படமாட்டாது எனவும் அரசுத் துறைகளில் கோரப்படும் பணியிடங்களுக்கு அரசு விதிமுறைகளின்படி பரிந்துரை செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**